
# திருக்குறுங்குடி - ஆழ்வார்கள் அநுபவம்

## (பாண்டிய நாட்டு திவ்ய தேசம்)



ஆசிரியர்:
'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸேவா ரசிகன்'
'ஸ்ரீ வேதாந்த தேசிக பதாம்புஜ ஸேவா ரசிகன்'
ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்

அட்டைப்படத்தில் ஸ்ரீ திருமலை நம்பி பிராட்டிமாருடன் - திருக்குறுங்குடி

( படம் உதவி: ராமானுஜ தாஸர்கள்/pbase.com )

# உள்ளடக்கம்

திருக்குறுங்குடி ( ஆழ்வார் பாசுரங்களின் வைபவம்) ----- பக்கம் 1 முதல் 17 வரை



திருமங்கையாழ்வார் - அஞ்சலி முத்ரையுடன் - திருக்குறுங்குடி
(நன்றி: : ராமானுஜ தாஸர்கள் /pbase.com)

ஸ்ரீ:

# திருக்குறுங்குடி - ஆழ்வார்கள் அநுபவம்

( பாண்டிய நாட்டு திருப்பதி)

**ஆசிரியர்: ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாச்சாரி சடகோபன்**

( Editor-in-Chief of eBooks at www.sadagopan.org )

******

திருநெல்வேலியிலிருந்து 27 மைல் தூரத்தில் உள்ள இந்த திருப்பதியில் வைஷ்ணவ நம்பி பஞ்சகேதக விமான நிழலில் குறுங்குடிவல்லி என்ற தேவியுடன் கோயில் கொண்டுள்ளார். ஸ்ரீ ராமாநுஜரிடம் ஒரு சிஷ்யன் போல் வந்து, வேதாந்த விஷயங்களுக்கு அர்த்தம் கேட்டபடியால், வைஷ்ணவ நம்பி என்ற பெயரை திருக்குறுங்குடி பெருமான் பெற்றார். கிழக்கு பார்த்து, இவர் நின்ற கோலத்தில் ஸேவை தருவதால் நின்ற நம்பி என்ற பெயரும் கொண்டார். இந்த திருப்பதியில் நின்ற நம்பி, இருந்த நம்பி, கிடந்த நம்பி, திருப்பாற்கடல் நம்பி என்ற எம்பெருமான்களுக்கு தனி ஸன்னதிகளும் உண்டு. தாம்பரபரணி ஆற்றங்கரை ஓரத்தில், திருப்பாற்கடல் நம்பியின் ஸன்னதி உள்ளது. ஆற்றங்கரைக்கு அருகில் உள்ள ஒரு கல்லின் மேல் அமர்ந்து ஸ்ரீ ராமாநுஜர் தன் சிஷ்யர்களுக்கு வேதார்த்தங்களை காலக்ஷேபமமுகமாக உபதேஸித்து வந்தார். இந்த காலக்ஷேப கோஷ்டியில் சேர்ந்து கொண்டுதான், திருக்குறுங்குடி நம்பி, அஷ்டாக்ஷர மந்த்ரத்தின் ரஹஸ்யார்த்தங்களை, ஸ்ரீ ராமாநுஜரிடமிருந்து கேட்டு, வைஷ்ணவ நம்பி என்ற திருநாமம் பெற்றார். ராமாநுஜர் அமர்ந்திருந்த கல்லிற்கு திருப்பரிவட்டபாறை எனப் பெயர்.

நின்ற நம்பிக்கும், கிடந்த நம்பிக்கும் உள்ள ஸன்னதிகளுக்கு நடுவே ஒரு சிவாலயம் உள்ளது. சிவனாருக்கு ப்ரத்யக்ஷமாக உள்ள திருக்குறுங்குடி நம்பியின் திவ்ய தேசத்தில், சிவன் அருகின் நிற்பது ஆச்சர்யப்படக்கூடிய விஷயமல்ல. திருக்குறுங்குடி நம்பியின் ஸன்னதிக்கு 6 மைல் தூரமுள்ள ஒரு குன்றின் மேல் மலைமேல் நம்பி கோயில் கொண்டுள்ளான்.

திருக்குறுங்குடி நமது ஆழ்வார்கள் பரம்பரைக்கு விசேஷமான ஸ்தலம். ஆழ்வார்கள் எல்லோரையும் தன் அங்கங்களாக கொண்ட நம்மாழ்வாருக்கும், ஆழ்வார்களில் கனிஷ்டரான (கடைசியான) திருமங்கை மன்னனுக்கும் இந்த திவ்ய தேசம் மிகவும் நெருங்கிய உறவு கொண்டது. நம்மாழ்வாரின் பெற்றோர்களான காரியாரும், உடைய நங்கையும் திருக்குறுங்குடி நம்பியை ஸேவித்துக் கொண்டு, புத்ர ஸந்தானம் தந்தருளுமாறு வேண்டினார்கள். அவர்கள் பிரார்த்தனைக்கிணங்கி, நாமே வந்து புத்ரனாக பிறக்கிறோம் என்று அர்ச்சக முகமாக திருக்குறுங்குடி நம்பி வரப்ரதானம் செய்தான். உடைய நங்கையும் கர்ப்பவதியாகி, கலியுகம் பிறந்த நாற்பத்து மூன்றாம் நாளில், பஹுதான்ய வருஷத்தில், வைகாசி பௌர்ணமியும், வைசாக நக்ஷத்ரமும் கூடிய சுப தினத்தில் "வகுளபூஷண பாஸ்கரோதயம்" என்ற நம்மாழ்வாரை திருக்குருகூரில் பிள்ளையாக பெற்றாள். தன் அவதாரத்திற்கு காரணமான பெருமாளை, 13 பாசுரங்கள் மூலம் நம்மாழ்வார், பின்னர் மங்களாஸாசனம் செய்தார்.

திருக்குறுங்குடியில் திருமங்கை மன்னன் வெகுவாக ஈடுபட்டிருந்தார். க்ஷத்ரிய குலத்தில் பிறந்து, "திருநறையூர் எம்பெருமான் திரு முன்பு, தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருசக்கரத்தின் கோயிற் பொறியாலே திரு இலச்சினை (ஸமாஸ்ரயணம்) பெற்று, கேசவாதி த்வாதச ஊர்த்வ புண்டரங்களோடு", ஸ்ரீ வைஷ்ணவராக மாறி, ஒவ்வொரு வருஷமும் 10,008 ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ததீயாராதனம் பண்ணி, பரம ஸ்ரீயுடன் எம்பெருமானிடமிருந்தே "பெற்ற தாயினும் ஆயின செய்யும் நலம் தரும்" திருமந்த்ரத்தை க்ரஹித்துக் கொண்ட பரம வைஷ்ணவரான கலியனுக்கு திருக்குறுங்குடி வைஷ்ணவ நம்பியிடம், அபிமானம் அதிகமாக இருந்தது ஸஹஜமான விஷயமே. ஸ்ரீவைஷ்ணவ தர்மத்தை கடை பிடித்து, ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தை வளர்த்த திருமங்கை, வைஷ்ணவ நம்பி என்று பின்னர் திருநாமம் ஏற்றுக் கொள்ளப் போகும் திருக்குறுங்குடி நம்பியின் திவ்ய தேசத்திலே திருநாடு அலங்கரித்தார். திருமழிசை திருக்குடந்தையில் தனக்கு அபிமான தெய்வமான ஆராவமுதனின் திவ்ய தேசத்தில் திருநாடு அலங்கரித்தது போல். திருமங்கை திருக்குறுங்குடியில் பரமபதம் எய்தினார்.

திருக்குறுங்குடி நம்பி நம்மாழ்வார், திருமங்கை, திருமழிசை, பெரியாழ்வார் ஆகிய

நான்கு ஆழ்வார்களிடமிருந்து 40 பாசுரங்கள் பெற்றார். இவைகளுள் 25 பாசுரங்கள் திருமங்கையால் அருளப்பட்டன. நம்மாழ்வார் அருளியவை 13 பாசுரங்கள். திருமழிசையும், பெரியாழ்வாரும் மொத்தத்தில் 2 பாசுரங்களை அருளியுள்ளார்கள்.

பெரியாழ்வார் திருக்குறுங்குடி நம்பியை பாலக்ருஷ்ணனாக ஸேவித்துக் கொண்டு, யசோதா முகமாக குழந்தையை செங்கீரை ஆடல் செய்ய அழைக்கிறாள். செங்கீரையாடல் என்பது, குழந்தைகள் பாட்டுக்கிசைந்து சாய்ந்து ஆடும் ஆடலுக்குப் பெயர். இதையே ஆனையாடல் என்றும் கூறுவார்கள். தாயும், குழந்தையுமாக செங்கீரையாடலில் ஈடுபட்டிருந்ததை அனுபவித்த பெரியாழ்வார், திருக்குறுங்குடி, திருவெள்ளறை, திருமாலிருஞ்சோலை, திருக்கண்ணபுரம் ஆகிய நான்கு திவ்ய தேசங்களையும் சேர்த்து பின் வரும் பாசுர மூலம் மங்களாஸாசனம் செய்தார்:

உன்னையும் ஒக்கலையில் கொண்டு தமில் மருவி

உன்னொடு தங்கள் கருத்தாயின செய்துவரும்,

கன்னியரும் மகிழக் கண்டவர் கண் குளிரக்

கற்றவர் தெற்றி வரப் பெற்ற எனக்கருளி,

**மன்னு குறுங்குடியாய் !**வெள்ளறையாய் !மதிள் சூழ்

சோலைமலைக்கரசே !கண்ணபுரத்தமுதே!

**என் அவலம் களைவாய் !ஆடுக செங்கீரை**

ஏழுலகும்முடையாய் !**ஆடுக ஆடுகவே.**

பராசர மஹர்ஷி விஷ்ணுபுராணத்தில்,

नास्ति विष्णोः परं तत्वं तस्य कालात् परा तनुः

நாஸ்தி விஷ்ணோ :பரம் தத்வம் தஸ்ய காலாத் பரா தநு :

என்று சொன்னார். விஷ்ணுவான உன்னைத் தாண்டிய தத்வம் ஏதும் இல்லை; உனது

திருமேனி காலாவஸ்தைகளை தாண்டி, ப்ரளய காலத்திலும் அழியாது, உச்சிஷ்ட்ட ப்ரஹ்ம்மமாக மன்னி விளங்குகிறது. ஆகவே உன்னை மன்னு குறுங்குடியாய் என அழைக்கிறேன் என்றுபெரியாழ்வார் சொன்னார்.

अञ्जसैव विश्वसृजो रूपम् அஞ்ஜஸைவ விச்வ ஸ்ருஜோ ரூபம் என்றபடி ஜகத்காரணான பகவானின் ரூபம் நித்யமானது என்ற தத்வத்தை பெரியாழ்வார் இங்கு குறிப்பிட்டார்.

திருமழிசை ஆழ்வார் திருக்குறுங்குடி நம்பியை "நாரஸிம்ஹ வபு ஶ்ரீமான் கேசவ புருஷோத்தம" என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சொல்லும் வகையில், ஹிரண்ய ஸம்ஹாரம் செய்த நரஸிம்ஹ மூர்த்தியாக ஸேவித்துக் கொண்டார். அவர் பாசுரம் பின் வருமாறு:

கரண்டமாடு பொய்கையுள் கரும்பனைப் பெரும்பழம்,

புரண்டு வீழ வாளை பாய் **குறுங்குடி** நெடுந்தகாய்,

திரண்ட தோளிரணியன் சினங் கொளாக மொன்றையும்,

இரண்டு கூறு செய்துகந்த சிங்கமென்பதுன்னையே.

விஷ்ணு தர்மம்,

दंष्ट्रा करालं सुरभीति नाशनं

कृत्वा वपुः दिव्य नृसिंह रूपिणा

தம்ஷ்ட்ரா கராலம் ஸுர பீதீ நாசநம்

க்ருத்வா வபு :திவ்ய ந்ருஸிம்ஹ ரூபிணா

என்று கொண்டாடிய ந்ருஸிம்ஹாவதாரத்தை, திருமழிசை கொண்டாடினார். பயங்கரமான கோரைப் பற்களுடன் அவதரித்து, தேவர்களின் பயத்தைப் போக்கி, ஹிரண்ய ஸம்ஹாரம் செய்து, உலகங்களை ரக்ஷித்த எம்பெருமானை ஆழ்வார் வணங்கிக் கொண்டார்.

திருவாய்மொழியின் முதற் பத்தின் பத்தாம் திருமொழியில்“ ,அல்லு நன்பகலுமிடை வீடின்றி ,நல்கி யென்னை விடான் நம்பி நம்பியே ”என்று ஒரு பாசுரத்தை முடித்த ஆழ்வார் ,அந்தாதி கணக்குப் படி ,நம்பி என்று ஆரம்பமாகும் பின் வரும் பாசுர மூலம்,

நம்பியைத் தென்குறுங்குடி நின்ற, அச்

செம் பொனே திகழும் திருமூர்த்தியை,

உம்பர் வானவராதியஞ் சோதியை,

எம்பிரானையென் சொல்லி மறப்பனோ

என திருக்குறுங்குடி நம்பியை மங்களாஸாசனம் செய்தார். தேவதேவனை, ஆதிமூர்த்தியை, ஸ்வர்ண விக்ரஹம் போல் திகழும் பெருமானைத் தென் திருக்குறுங்குடி நம்பியை என்றும் மறக்க முடியாத நிலையில் தான் இருப்பதாக இங்கு நம்மாழ்வார் சொன்னார். உத்தமூர் ஸ்வாமிகள், “செம் பொனே திகழும் திருமூர்த்தி” என்பது “ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே .... ... ஹிரண்யகேச: ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:” என்ற வேத வாக்யங்களில் ஆதாரமானது என்று குறிப்பிட்டுள்ளார். உருக்கி எடுத்த பொன் போல் விளங்கும் என தென் திருக்குறுங்குடி பெருமானை எந்த குறையைக் கூறியும் மறக்க முடியாத நிலையில் உள்ளேன் என நம்மாழ்வார் சொன்னார்.

அடுத்தபடியாக நம்மாழ்வார் ,திருவாய்மொழியின் மூன்றாம் பத்தின் ,ஒரு பாசுர மூலம் மங்காளாஸாஸனம் செய்தார் .அப்பாசுரம் பின் வருமாறு:

உளனாகவே எண்ணித் தன்னை யொன்றாகத் தன் செல்வத்தை

வளனா மதிக்கும் இம் மானிடத்தைக் கவி பாடி யென்?

குளனார் கழனி சூழ் **கண்ணன் குறுங்குடி** மெய்ம்மையே,

உளனாய வெந்தையை எந்தை பெம்மானை ஒழியவே.

அழகிய தடாகங்கள் நிறைந்து, அவைகள் மூலம் பாசனம் பெற்று செழுமையான

வயல்களை உடைய திருக்குறுங்குடியில், உண்மையாகவே எல்லா ஐச்வர்யங்களும், கல்யாண குணங்களும் நிரம்பி நிற்கும் பரமோபகாரியான என் ஸ்வாமியான நம்பியை விட்டு, ஒன்றுமில்லாத தன்னை ப்ரபு என்று நினைத்துக் கொண்டு தடுமாறி ப்ரமித்து நிற்கும் அல்ப மானிடத்தை நான் கவி பாட மாட்டேன் என பிடிவாதமாக இப் பாசுர மூலம் தெரிவித்தார். இல்லாதவற்றை, ஏற்றிச் சொல்லி, இம் மானிடத்தைப் போற்றிப் பாடுவது அபத்தமான காரியம்; அமங்களமானதும் கூட! திருக்குறுங்குடி நம்பியோ -

ओं ज्येष्ठाय नमः ஓம் ஜ்யேஷ்டாய நம:

என்று ஸஹஸ்ர நாமம் ஒன்றால் துதிக்கப்படுபவன். எல்லோருக்கும் முற்பட்டு, மிகவும் ஆராதிக்க தகுந்தவன். அதனால் ஸ்ம்ருதி,

भगवान् वासुदेवो ज्यायसी विभूतिः பகவான் வாஸுதேவோ ஜ்யாயஸீ விபூதி:

என்று கொண்டாடுகிறது. அதாவது, வாஸுதேவன் ஒருவன் தான் பகவான்; ஆதலால் அவன் கல்யாண குணங்களே எல்லாவற்றையும் விட முதலில் போற்றப்பட வேண்டும் என்று ஸ்ம்ருதி சொல்லியது. அப்பேற்பட்ட புராதன புண்ய புருஷனை பாரதம், ஸபா பர்வத்தில்,

एष प्रकृतिः अव्यक्तः कर्ता चैव सनातनः।

परश्च सर्वभूतेभ्यः तस्मात् वृद्धतमोऽच्युतः॥

ஏஷ ப்ரக்ருதி: அவ்யக்த: கர்தா சைவ ஸநாதந: |

பரச்ச ஸர்வபூதேப்ய: தஸ்மாத் வ்ருத்ததமோச்யுத: ||

என விவரித்தது. அச்யுதனே சூக்ஷ்ம ப்ரக்ருதியாகவும், ஜகத்தின் ஆதார காரணமாகவும், எல்லா தர்மங்களையும் தூண்டுபவனாகவும் உள்ளான். உலகில் காணப்படும் சேதனாசேதனங்கள் எல்லாவற்றிற்கும் யஜமானனாகவும், அவைகளை நியமிப்பவனாகவும் உள்ளான். அதனால் அச்யுதன் எந்தை பெம்மான், ஜ்யேஷ்ட்டன், ஆதி புருஷன் என பாரத ச்லோகம் சொல்லியது. ஆகவே ஜகதாதாரனாகிய திருக்குறுங்குடி நம்பி என்ற ஆதி புருஷனை விலக்கி, ஒரு அல்பாயுஸான மானிடத்தின்

மேல் நான் எப்படி கவி பாடுவேன்? அது ஒரு பொழுதும் நடக்காத காரியம். "குறுங்குடி மெய்ம்மையே, உளனாய எந்தையை, எந்தை பெம்மானை ஒழிய" மற்ற ஒருவரையும் ஒரு பொருளாக மதித்து, நான் பாட மாட்டேன் என நம்மாழ்வார் கூறினார்.

திருவாய்மொழியின் ஐந்தாம் பத்து, ஐந்தாம் திருமொழியின் பதினொரு பாசுரங்களையும் நம்மாழ்வார் திருக்குறுங்குடி எம்பெருமானுக்கே அர்ப்பணித்தார். இங்கு பராங்குச நாயகி முகமாக பாசுரங்களை அருளினார். நான்காம் திருமொழியில், இரவு காலம், தன்னை ஊழியாய் பாதிக்கிறது. எம்பெருமானாகிய நாயகனின் பிரிவை என்னால் பொறுக்க முடியவில்லை. தன்னைப் போல் உருகி வரும் வானமும் பனித் துகள்களை சொரிந்து, தன்னைப் பாதிக்கிறதென்று பராங்குச நாயகி கூறினாள். எம்பெருமானோடு சேர்ந்து சுகிக்க முடியாது, அவல நிலையில் தான் இருப்பதைப் பற்றி, அவள் புலம்பி வரும் சமயம், பொழுதும் விடிந்தது. பராங்குச நாயகியின் தாயாரான உடைய நங்கை, தன் பெண் படும் கஷ்டம் காண ஸகியாது, நீ பொறுமையுடன் இருக்க வேண்டும். நீ பகவானை கோபத்துடன் பேசக் கூடாது. இது உனக்கு சரியல்ல என்று சொன்னாள். உடைய நங்கையுடன் கூடி இருந்த அன்னைமார்களும் அதே ரீதியில் பேசினர். இவைகளை எல்லாம் கேட்டிருந்த பராங்குச நாயகி, அவர்களுக்கு ஐந்தாம் பத்தின், ஐந்தாம் திருமொழிப் பாசுரங்கள் மூலம் பதில் சொல்கிறாள். அன்னைமார்களே என்னை நீங்கள் கோபிப்பது சரியல்ல. திருக்குறுங்குடி நம்பியின் சௌந்தர்யத்தையும், அவனது ஆயுதங்கள், ஆபரணங்களை கண்ட பின், என் மனது அடக்க முடியாத மையல் அவன் மேல் கொண்டு, பௌர்ணமியில் கடல் போல் அலை பாய்கிறது என்றாள். இந்த கருத்துக்கள் கொண்ட முதல் பாசுரம் பின் வருமாறு:

எங்ஙனேயோ அன்னை மீர்காள்! என்னை முனிவது நீர்?

நங்கள் கோலத் **திருக்குறுங்குடி நம்பியை** நான் கண்டபின்,

சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களொடும்,

செங்கனி வாயொன்றினோடும் செல்கின்ற தென்நெஞ்சமே.

என்னை முனிவதால் (கோபிப்பதால்) என்ன ப்ரயோஜனம். என் நெஞ்சினுள் புகுந்து, நீங்கள் கவனித்தீர்களானால், அங்கு திருக்குறுங்குடி என்ற திவ்ய தேசத்தில்

எழுந்தருளியிருக்கும் நம்பியின் ஒளி மிகுந்து யக்ஞோபவீதமும், மகர குண்டலங்களும் வக்ஷஸ்தலத்தில் அழகாக சேர்ந்திருக்கும் ஸ்ரீவத்ஸமென்கிற மறுவையும், அவனுடைய ஆபரணங்களையும், அவன் திருமேனியையும் காண்பீர்கள். வேறு ஒன்றையும் பொருளென மதிக்காத என் நெஞ்சத்தில் அவன் கோயில் கொண்டிருப்பதைக் காண்பீர்கள். அவனை நீங்கள் எனக்கு அறிமுகப்படுத்தினீர்கள்! அவனை ஒரு தடவை ஸேவித்துக் கொண்ட பின்னர், அவன் என் நெஞ்சத்தை விடாது நிற்கும் தன்மையானகி விட்டான். என்னால் அவனை மறக்க முடியவில்லை. நீங்கள் என் நிலை தெரிந்தும் என்னிடம் கோபிக்கலாமா என பின் வருமாறு பராங்குச நாயகி கேட்டாள்:

என் நெஞ்சினால் நோக்கிக் காணிர் என்னை முனியாதே,

தென்னன் சோலைத் **திருக்குறுங்குடி நம்பியை** நான் கண்ட பின்

மின்னும் நூலும் குண்டலமும் மார்பில் திருமறுவும்.

மன்னும் பூணும் நான்கு தோளும் வந்தெங்கும் நின்றிடுமே.

அடுத்த பாசுரத்தில், நீ இப்படியும் செய்யலாமா என்று கோபிக்கும் தாயிடம், அம்மா, நீ என்னை அவன் கோயிலுக்கு அழைத்துச் சென்று, அவனுடைய தர்சன பாக்யம் கிடைக்குமாறு செய்தீர்கள். அவனுடைய வீரச் செயல்களை எனக்கு எடுத்துச் சொன்னீர்கள். அவனுடைய பஞ்சாயுதங்களின் மஹிமைகளை,

इमं हरेः पञ्चमहायुधानां स्तवं पठेद्योऽनुदिनं प्रभाते ।

समस्तदुःखानि भयानि सद्यः पापानि नश्यन्ति सुखानि सन्ति ॥

இமம் ஹரே: பஞ்ச மஹாயுதாநாம்

ஸ்தவம் படேத்யோநுதிநம் ப்ரபாதே |

ஸமஸ்த துக்காநி பயாநி ஸத்ய:

பாபாநி நச்யந்தி ஸுகாநி ஸந்தி ||

என்று உபதேசித்தீர்கள். நீங்கள் உபதேசித்த பிரகாரம், அந்த பஞ்சாயுதங்களை

திருக்குறுங்குடி நம்பியின் திருமேனியில் கண்டபின், அவை என் உள்ளத்துளே புதைந்தன. நான் என் கண்களை மூடிக் கொண்டலும், என் மனத் திரையை விட்டகலாது, என் ஐயனின் சங்கும், சக்கரமும், சார்ங்கமும், நந்தகமும், கதையும் நிற்கின்றன. நான் என்ன செய்வேன் எனப் பின் வருமாறு பராங்குச நாயகி சொன்னாள்:

நின்றிடும் திசைக்கும் நையுமென்றன்னையரும் முனிதிர்,

குன்றமாடத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்,

வென்றி வில்லும் தண்டும் வாளும் சக்கரமும் சங்கமும்,

நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா நெஞ்சுள்ளும் நீங்காவே.

நீங்கள் அவன் ஐம்படைகளை அறிமுகப்படுத்தின பின், அவைகளின் தேஜஸ்ஸும், அழகும் மனதில் நிறைந்துள்ளது. அவைகளைப் பற்றி நினைத்து கண்ணை மூடினால், அவை நெஞ்சினுள் நிறைந்து அகல மாட்டேன் என்கிறது. இந்த அனுபவத்தில் ஆழ்ந்திருக்கும் சமயம், நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு, நான் பதில் சொல்ல முடியாது நிற்பது கண்டு, என்னை கோபிக்கிறீர்கள். நான் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் உள்ளேன். நீங்கள் இதை புரிந்து கொண்டால் என்னிடம் கோபிக்கமாட்டீர்கள் என பராங்குச நாயகி கூறினாள்.

நான் திருக்குறுங்குடி நம்பியைக் கண்ட பின், என் கண்கள் கண்ணீர் சொரிந்த வண்ணமாகவே இருக்கின்றன. ஏனென்று கேட்டீர்களானால், என் கண்கள், அவன் அணிந்துள்ள குளிர்ந்த திருத்துழாய் மாலையும் திருவடி மேல் உள்ள ஸ்வர்ண கிரீடத்தையும், அவன் இடையில் உள்ள பீதாம்பரத்தையும், அந்த பீதாம்பரத்தை சுற்றி உள்ள ஒட்டியாணத்தையும் கண்டன. அவன் திரு உருவைக் கண்டு, அந்த மங்கள பிம்பத்தை எனது நெஞ்சில் நிறுத்திய எனக்கு அவன் கிட்டவில்லை. அவனைக் கண்டும், அவனைப் பெற முடியவில்லை. நான் மிகவும் பாவம் செய்திருக்க வேண்டும். அதை நினைத்து, என் கண்கள் ஸதா கண்ணீர் சொரிந்து வருகின்றன என நாயகி பின் வருமாறு கூறினாள்:

நீங்க நில்லாக் கண்ணநீர்களென்று அன்னையரும் முனிதிர்,

தேன்கொள் சோலைத் **திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்,**

பூந்தண் மாலைத் தண் துழாயும் பொன்முடியும் வடிவும்,

பாங்கு தோன்றும் பட்டும் நாணும் பாவியேன் பக்கத்தவே.

அடுத்து வரும் பாசுரங்களில் திருக்குறுங்குடி நம்பியை கண்டபின், தனக்கு ஏற்பட்ட அனுபவ விசேஷங்களைப் பின் வருமாறெல்லாம் பராங்குச நாயகி விவரித்தாள்:

தொக்க சோதித் தொண்டை வாயும் நீண்ட புருவங்களும்,

தக்கதாமரைக் கண்ணும் பாவியேனாவியின் மேலனவே!

கோலநீள் கொடிமூக்கும் தாமரைக் கண்ணும் கனிவாயும்,

நீலமேனியும் நான்கு தோளும் என் நெஞ்சம் நிறைந்தனவே.

நிறைந்த சோதி வெள்ளஞ் சூழ்ந்த நீண்ட பொன்மேனியொடும்,

நிறைந்ததெனுள்ளே நின்றொழிந்தான் நேமியங் கையுளதே.

செய்யத் தாமரைக் கண்ணும் அல்குலும் சிற்றிடையும் வடிவும்,

மொய்ய நீள்குழல் தாழ்ந்த தோள்களும் பாவியேன் முன் நிற்குமே.

திருக்குறுங்குடி நம்பியைத் தான் ஸேவித்துக் கொண்டபின், அவனுடைய கோவைப் பழம் போன்ற திரு உதடுகளும், நீண்ட புருவங்களும், அவற்றிற்கு சமமான நீளம் கொண்ட செந்தாமரைக் கண்களும், கொடி போன்று தீர்க்கமாய் விளங்கும் திருமூக்கும், கரிய திருமேனியும், நான்கு திருதோள்களும், அவன் கையில் உள்ள ஜோதிர்மயமான திருவாழியும் தன்னை முற்றிலும் வசீகரித்து, நிரந்தரமாக மனதில் புகுந்தன; இத்தனை கண்டும், அவனை தாவி அணைத்து, அனுபவிக்கப் பெறாத பாவியாக நான் நிற்கிறேனே எனக் கண்ணீர் விட்டு வருகிறேன் என பராங்குச நாயகி, தன் தாயாரிடம் சொன்னாள். எனக்கு ஸ்பஷ்ட்டமாக தெரிந்து, தன் லாவண்யத்தால் என்னை பித்தேறச் செய்து வதைக்கும் திருமேனியை உன்னால்

அறியமுடியவில்லையே, அம்மா என்று பெண் சொன்னாள். நீ, நான் படும் பாடு தெரியாது கோபிக்கிறாயே எனக் கேட்டாள்.

இந்த பத்து திருமொழிகளில் திருக்குறுங்குடி நம்பியின் மோஹனத் திருமேனியில் அங்க, அங்கமாக ஈடுபட்ட நம்மாழ்வார், தான் அனுபவித்து அருளிய பாசுரங்களை ஓத வல்லார், இப்புவியிலேயே பரம வைஷ்ணவ லக்ஷணம் பெற்று பரமை காந்திகளாக வாழ்வர் எனப் பின் வருமாறு தெரிவித்தார்:

அறிவரியபிரானை ஆழியங்கையனையே யலற்றி,

நறியநன்மலர்நாடி நன்குருகூர்ச்சடகோபன் சொன்ன,

குறிகொளாயிரத்துளிவைப் பத்தும் **திருக்குறுங்குடியதன் மேல்**

அறியக் கற்று வல்லார் வைட்டணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே.

திருக்குறுங்குடி எம்பெருமான் மேல் தீராத காதல் கொண்டு, நாயகி பாவம் அடைந்து, குருகூர் சடகோபன் அருளிய பாசுரங்களின் மாதுர்யமும், லாலித்யமும் விவரிக்க முடியாதவை.

திருக்குறுங்குடியில், தன் நாயகனுடன் கலந்து பரமபதம் அடைந்த திருமங்கையின் பாசுரங்கள் 25 ஆகும். முதல் பாசுரத்தில் “குறுங்குடி நெடுங்கடல் வண்ணா, பாவினாரின் சொல் பன்மலர் கொண்டுன் பாதமே பரவி நான் பணிந்து, என் நாவினால் வந்துன் திருவடியடைந்தேன்” என்று ஆழ்வார் சரணாகதி செய்தார். கலியை ஒழிக்க என்ன செய்ய வேண்டும் என்பதை யோசித்து அறிந்து, பாமாலை தொடுத்து, உன் திருவடியில் சேர்த்து, உன் திருநாமங்களை ஸங்கீர்த்தனம் செய்து நான் பிழைத்தேன் என்று கலியன் சொன்னார். திருவிண்ணகரப் பாசுரம் ஒன்றில் திருக்குறுங்குடி எம்பெருமானை “குறுங்குடியுள் குழகா” என்று அழைத்து, திருமங்கை ஆனந்தப் பட்டார்.

திருநெடுந்தாண்டகப் பாசுரமொன்றில், தனது கிளி “குறுங்குடியுள் முகிலை, (குறுங்குடியுள் முகில் வண்ணனாக ஸேவை தரும்) திருமாலைப் பாடக் கேட்டு, வளர்த்தனால் பயன் பெற்றேன் வருக வென்று, மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே” என்று திருமங்கை அருளினார். பால் ஏடும், பழமும் அளித்து, என்

செல்லக் கிளியை வளர்த்தேன். அது பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரத்தால் திருக்குறுங்குடியில் உள்ள திருமாலின் நாமங்களைக் கூவிப் பாடியது. நானும் இந்த பாக்யசாலியான கிளியை வளர்த்தன் பயனை அடைந்தேன் என திருப்தியுடன் ஆழ்வார் சொன்னார்.

திருமங்கை மன்னன் திருப்புல்லாணியில் பரகால நாயகி முகமாக மங்களாஸாசனம் செய்த பின், அதே நாயகித் தன்மையுடன், என்னை திருக்குறுங்குடி எம்பெருமான் முன் கொண்டு சேர்த்து விடுங்கள் என்று தனது தோழிகளிடம் கேட்டுக் கொள்ளும் வகையில் பிறந்தவை "தவள விளம் பிறை" என்று ஆரம்பமாகும் பத்து பாசுரங்கள். "குவளைமலர் நிற வண்ணர் மன்னுகுறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின், கோதை நறுமலர் மங்கை மார்பன் குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின், கோலமயில் பயிலும் புறவில் குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின், குருமணி நீர் கொழிக்கும் புறவில் (சுற்றுப் புறங்களை உடைய) குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின், கொண்டல் மணி நிற வண்ணர் மன்னுகுறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின், கொல்லை வளரிள முல்லை புல்கு குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின், கொங்கலர் தண் பனை சூழ்புறவில் குறுங்குடிக்கேயென்னையுய்த்திடுமின், கோவலர் கூத்தன் குறிப்பறிந்து குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின், கூத்தனிமையவர் கோன் விரும்பும் குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின், கொற்றவன் முற்றுலகாளி நின்ற குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின்" எனப் பத்து பாசுரங்கள் மூலம் பிரார்த்தித்தார். தான் விரஹ தாபம் மேலிட்டு, ஸஹிக்க முடியாத வேதனையுடன் இருப்பதை தோழிகளிடம் சொல்லி, என் நாயகன் அருகில் கொண்டு சேர்த்து என்னைக் காப்பாற்றுங்கள் என உருக்கமாக வேண்டினாள் பரகால நாயகி. இந்த அருமையான பாசுரங்களில் சில பின் வருமாறு:

தவள விளம்பிறை துள்ளு முந்நீர்த்

தண்மலர்த் தென்றலோடன்றிலொன்றித்

துவள, என்னெஞ்சகம் சோர வீரும்

சூழ்பனி நாள் துயிலாதிருப்பேன்,

இவளுமோர் பெண் கொடி யென்றிரங்கார்

என் நலமைந்து முன் கொண்டுபோன

குவளைமலர் நிற வண்ணர் மன்னு

குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின்.

( கருத்து) ஒன்றோடு ஒன்று சேர்ந்து கொண்டு, வெளுத்த இளம் பிறையும், அமைதியில்லாது அலை எறியும் கடலும், குளிர்ந்த மலர்கள் வாடை கொண்ட தென் திசைக் காற்றும், தனது நாயகனை பிரிந்து அலறும் அன்றில் பக்ஷியும் என் நெஞ்சத்தை கலக்கி, சோர்வடையச் செய்கின்றன. எங்கும் பனி சூழ்ந்த இந் நாளில் நித்திரை செய்ய முடியாத நிலையில், நானும் கொட்டு, கொட்டு என்று விழித்திருக்கிறேன். இவள் தான் நம் நாயகியாயிற்றே, ஒப்பிலா கொடி போன்ற அழகு உடைய பெண்மணியாயிற்றே என்று நினைத்து இரங்கி, தயை புரியாது, என்னுடன் கூடி கலந்திருந்து, என்னை விட்டு பிறகு அகன்ற திருக்குறுங்குடி நம்பி என்ற குவளை (கரு நெய்தல்) வண்ணத்து நாயகனின் திருப்பதியில் என்னைக் கொண்டு சேர்த்து விடுங்கள். தோழிகளே, உங்களுக்கு இந்த உதவி புண்ணியமாகும்.

திண் திமிலேற்றின் மணியுமாயன்

தீங்குழலோசையும் தென்றலோடு,

கொண்டதோர் மாலையும் அந்தி யீன்ற

கோல விளம்பிறையோடு கூடி,

பண்டையவல்ல இவை நமக்குப்

பாவியேனாவியை வாட்டம் செய்யும்,

கொண்டல் மணி நிற வண்ணர் மன்னு

குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின்.

( கருத்து) இதுவோ மாலைப் பொழுது. இந்த அழகான நேரத்தை அனுபவிக்க முடியாதபடி, என் ஆவி அனலில் இட்ட மெழுகு போல் உருகிறது. மாடு மேய்த்து வரும்

இடையர்களின் புல்லாங்குழலோசை, என் நாயகனான கண்ணபிரானின் வேய்ங்குழல் நாதத்தை நினைவுறுத்துகிறது. த்ருடமான திமில் உடைய மாடுகள் மேயும் போது, தங்கள் கழுத்தை அசைக்கின்றன. அந்த சமயம், அவைகளின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணிகள் ஒலித்து, அந்த ஓசையை தென்றல் காற்றுடன் கலந்து பரப்புகின்றன. ப்ருந்தாவனத்தில் மாடுகள் மேய்த்த என் நாயகனின் நினைவை எனக்கு அந்த மணியோசைகள் ஏற்படுத்துகின்றன. மாலைப் பொழுது தேய்ந்து, அந்தி நேரமாகியது. அழகிய இளம் பிறை சந்திரனும் தன் கலையோடு வெளிப்பட்டு, எனது விரஹ தாபத்தை அதிகரிக்கிறான். பாவியான என்னை இப்படியாக வாட்டி, வதைக்கும் ஒலி, ஒளிச் சின்னங்கள் உதவாது, வெகுவாக உபத்ரவிக்கின்றன. நான் இந்த கொடுமைகளிலிருந்து தப்ப ஒரே ஒரு வழி தான் உண்டு. அது, நீங்கள் என்னை நீலமேக வண்ணனான திருக்குறுங்குடி நம்பியின் திருப்பதியில் கொண்டு விடுவதுதான்.

தோழிமார்களே! என்னுடைய ஹிதத்தில் விருப்பம் கொண்டவர்களே! என்னை இந்த நரக வேதனையிலிருந்து, தயவு செய்து காப்பாற்றுங்கள் என பரகால நாயகி வேண்டினாள். “நாண், மடம், அச்சம் நமக்கிங்கில்லை”, நான் இருக்கும் நிலையில் எனக்கு வெட்கமும், தயக்கமும், பயமும் கிடையாது. “ஐங்கணை வில்லி தண்ணாமை யென்னொடு மதனை அறியமாட்டேன்”. மன்மதன் ஐந்து புஷ்ப பாணங்களைத் தனது வில்லில் தொடுத்து, தன் பராக்கிரமத்தை (ஆண்மையை) என்னிடம் காட்டும் வகையை, இவ்வளவு தான் என்று அறிந்துகொண்டு, அந்த வேதனையிலிருந்து தப்பும் வழி அறியாதவளாக உள்ளேன். மேலும் நான் காமதேவனின் அம்புகளிலிருந்து மேலும் உபாதை படாதிருக்க, “கோவலர் கூத்தன் குறிப்பறிந்து குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின்”, என்று பரகால நாயகி பிரார்த்தித்தாள். இடையர்களுக்கு விசேஷமான குடக்கூத்தை நாற்சந்தியில் ஆடி மகிழ்விக்கும் கண்ணனின் நோக்கம் என்னவென அறிந்து, என்னை குறுங்குடியில் சேர்த்து விடுங்கள். நான் பிழைத்துப் போவேன் என்று நாயகி சொன்னாள். தான் வேண்டியது போல், வேண்டிக் கொண்டு, திருக்குறுங்குடியை அடைந்து சரணாகதி செய்து உய்வதே உயரிய மார்க்கம் என காமரு சீர்க் கலியன் கூறினார்.

தோழிகளும், பரகால நாயகியை திருப்புல்லாணியிலிருந்து, திருக்குறுங்குடி கொண்டு விட்டனர். அங்கு தன் நாயகனை ஸேவித்துக் கொண்டு, தான் அனுபவிக்கும்

கல்யாண குணங்களையும், திருமேனி அழகையும், நாம் எல்லோறும் அனுபவித்து, அவன் அருள் பெற வேண்டுமென மற்ற பத்து பாசுரங்கள் மூலம் தெரிவித்தார். இந்த திருப்பதியின் இயற்கை அழகுகளை உயரிய கவிதா சக்தியுடன் கலியன் விவரித்தார். இயற்கை வர்ணனை நிரம்பிய பத்து பாசுரங்களில் ஒன்று பின் வருமாறு:

துங்கார் அரவத் திரை வந்துலவத்தொடு கடலுள்,

பொங்கார் அரவில் துயிலும் புனிதனூர் போலும்,

செங்காலன்னம் திகழ் தண் பணையில் பெடையோடும்.

கொங்கார் கமலத்தலரில் சேரும் **குறுங்குடியே**.

இங்கு, "துங்கம் ஆர் அரவம் திரை வந்து உலவத்தொடு கடலுள் பொங்கு ஆர் அரவில்" காணப்படும் ஒரு காட்சியை பரகால நாயகி விவரித்தாள். மேன் மேலே கிளர்ந்து, அலை வீசுவதால் பேரொலி கொண்ட அலைகள் நிரம்பிய ஆழமான பாற்கடலின் நடுவில், ஒரு அத்புதமான காட்சியைக் காண்கிறாள். அங்கு அவள் காண்பது, "பொங்கு ஆர் அரவில் துயிலும் புனிதன்". திருவனந்தாழ்வான் என்ற ஆதிசேஷன் மேல் யோக நித்திரை செய்யும் பரந்தாமனை, அவள் ஸேவித்துக் கொள்கிறாள். அந்த காட்சி பரகால நாயகிக்கு, திருக்குறுங்குடியில் கிடைக்கிறது. இந்த பாசுரம் திருப்பாற்கடல் நம்பி என்ற திருக்குறுங்குடி ஸன்னதிகளில் ஒன்றைக் கொண்டாடுவதாகும். அப்பேற்பட்ட திருப்பாற்கடல் நம்பி சயனித்துள்ள தலத்தில், "செங்கால் அன்னம், திகழ் தண் பணையில், கொங்கு ஆர் கமலத்து அலரில்" சேர்ந்திருப்பதை நாயகி காண்கிறாள். சிவந்த கால்களை உடைய ராஜ ஹம்ஸம், சிறு அலைகள் வீசும் குளிர்ந்த நீர் பிரதேசங்கள் கொண்ட வயல்களில் தன் பேடையோடு தாமரை மலரின் மேலே அமர்ந்திருப்பதையும் திருக்குறுங்குடியில் நாயகி காண்கிறாள்.

அப்பேற்பட்ட இயற்கை அழகுகள் நிறைந்த திவ்ய தேசத்தில் உள்ள திருக்குறுங்குடி நம்பியை, தூய தீர்த்தமும், தூபமும், புஷ்பங்களும், பரிமளத் திரவியங்களும் எடுத்துக் கொண்டு வந்து ஆராதியுங்கள். அவனை துதித்து வணங்குங்கள். அனாதியாக இருக்கும் உங்கள் பாவங்களும், இனி வரவிருக்கும் துக்கங்களும் தொலையும் எனக் கலியன் பின் வருமாறு உபதேசித்தார்:

தீநீர் வண்ண மாமலர் கொண்டு விரையேந்தி,

தூநீர் பரவித் தொழுமின் எழுமின் தொண்டீர்காள்,

மாநீர் வண்ணர் மருவியுறையுமிடம் வானில்,

கூனீர் மதியை மாடம் தீண்டும் **குறுங்குடியே.**

நின்ற வினையும் துயரும் கெட மாமலரேந்தி,

சென்று பணிமின் எழுமின் தொழுமின் தொண்டீர்காள்,

என்றும் இரவும் பகலும் வரிவண்டிசை பாட,

குன்றின் முல்லை மன்றிடை நாறும் **குறுங்குடியே.**

சிறு மலையில் புஷ்பித்திருக்கும் முல்லை மலர்களின் நறுமணம் நிறைந்துள்ளதாகவும், இளம் பிறைமதி, மாடங்களைத் தொட்டுக் கொண்டிருப்பதாகவும் உள்ள திருக்குறுங்குடியில் நித்ய வாஸம் செய்யும் தேவாதி தேவனை, துல்யரான நீங்கள் தீ, நீர் எடுத்துச் சென்று பணிந்தீர்களானால் கொடுவினைகள் எல்லாம் விலகி, பரம மங்களங்கள் அடைவீர்கள் என கலியன் கூறினார். தன்னுடைய "ஒலிமாலை ... பாடப் பாவம் நில்லாவே" என்று தன் பாசுரங்களைப் பாடுவதால் ஏற்படும் பலனை விளக்கினார். திருக்குறுங்குடியில் நமது பரமாசார்யர்களுக்கு மிகுந்த அனுக்ரஹங்கள் செய்த ஸ்ரீ வைஷ்ணவ நம்பி, திருக்குறுங்குடிவல்லி என்ற திவ்ய தம்பதிகளை நமஸ்கரித்துக் கொண்டு, இக் கட்டுரை மேலும், வளரப் பிரார்த்திக்கிறேன்.

**श्री वामन दक्षिण बद्रीकाश्रम क्षेत्रे क्षीरसागर पुष्करणी सिंधुनदी तीर्थ तटे पञ्च  केतक विमानछायायां स्थिताय पूर्वाभिमुखाय श्रीमते वामन क्षेत्रवल्ली குறுங்குடிவல்லீ नायिका समेत श्री वामन क्षेत्र पूर्णाय குறுங்குடி நம்பி श्रीवैष्णव पूण வைஷ்ணவ நம்பி नामयुताय इतर त्रिविक्रम पूर्ण आसीन श्रीधर पूर्ण श्री भू समेत पद्मनाभ पूर्णः पार्श्वे पर्वते हृषीकेश पूर्ण इत्यपि दर्शन प्रधात्रे पर ब्रह्मणे नमः**

SrI vAmana dakshiNa badrIkASrama kshetre kshIrasAgara pushkaraNI simdhunadI tIrtha taTe panca ketaka vimAnaChAyAyAm sthitAya pUrvAbhimukhAya SrImate vAmana kshetravallI (kurunguDi vallI) nAyikA sameta SrI vAmana kshetra pUrNAya (kurunguDi nambi) SrI vaishNava pUrNa

(vaishNava nambi) nAmayutAya itara trivikrama pUrNa AsIna SrIdhara pUrNa SrI bhU sameta padmanAbha pUrNaH pArSve parvate hrshIkeSa pUrNa ityapi darSana pradAtre para brahmaNe namaH

||சுபம்||

தாஸன்

ஒப்பிலியப்பன் கோவில் வரதாசாரி சடகோபன்